# பீஹாரில் வெள்ளநிலைமை மோசமடைகிறது!

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆவணி 28 ஷவ்வா:9 இதழ்: 214
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-9-78

இனும்

செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணா தயாரிப்புக்களை வாங்கி இனும் பொருட்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்
இணுவில்

தொலைபேசி: 7412

## அணை உடைந்து நூறுகிராமங்கள் மூழ்கின!!

புதுடில்லி, செப். 12

பீஹாரில் வெள்ளநிலைமை மோசமடைந்துள்ளது என்றும் ஆபத்தான கட்டத்தை அடைந்திருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கங்கைநதியின் சீற்றத்தினால் அணைக்கட்டொன்று உடைந்து பீஹாரில் நூற்றுக்கதிகமான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன என்றும் பத்தாயிரம் வீடுகள் இடிந்துவிழுந்துவிட்டன என்றும் நேற்றிரவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியதும் விமானநிலையத்தில்வைத்து

# ஜே. ஆருக்கு அவமானத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டது

## ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம்

(கொழும்பு)

"திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி, அவரை அவமானப்படுத்தவே கடந்தவருடம் மார்ச்மாதம் பதினொராம் திகதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கடவுச்சீட்டு (பாஸ்போட்) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பரிசீலிக்கப்பட்டது" என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு. ரி. ஜெயசிங்கா நேற்று ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு நேற்று மீண்டும் கூடிய பொழுது, திரு. ஜெயசிங்காவும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் சாட்சியமளித்தனர். பின்னர் இவர்கள் குறுக்குவிசாரணை செய்யப்பட்டனர். திரு. ஜெயசிங்கா தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது;

### நடைமுறைக்கு ஒவ்வாதது

''எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தன, வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியபொழுது (கடந்த ஆண்டு மார்ச் மாதம் 11ந் திகதி) கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து, நடைமுறைக்கு ஒவ்வாதவகையில் அவர் தொந்தரவுபடுத்தப்பட்டார்.

''இவ்விதமான தொரு செயல முன்னர் ஒருபொழுதும் நடைபெற்றதில்லை. திரு. ஜெயவர்த்தனவுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி, அவமானத்தை உண்டாக்கவே

(6-ம் பக்கம் பார்க்க)

## கப்பலில் ஏற்பட்ட தீ! ஒருவர் பலி; மூவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த ஒரு கிரேக்க சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்க முயற்சித்தபோது ஒருவர் பலியானர். மூவர் பலத்த எரிகாயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை நிகழ்ந்தது.

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த ஒரு கிரேக்க சரக்குக் கப்பலின் இயந்திர அறை நேற்றுத் தீப்பற்றிக்கொண்டபோது, துறைமுகத் தீயணைக்கும் படையினர், தீயை அணைக்கப் பல மணி நேரம்வரை போராடினர். தீ பின்னர் அணைக்கப்பட்டபோதிலும், தீயணைக்கும் படையைச் சேர்ந்த துவான் டாவுட்டீன் என்பவர் கடமையின் போது பலியானர். வேறு மூவர் பலத்த எரிகாயங்களுக்குள்ளானர்கள். (ம)

## ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, அக்டோபர் மாதம் இந்தியபவுக்கு விஜயஞ்செய்வார்,

அடுத்த மாதம் 27ந் திகதி பாரதத்திற்கு விஜயஞ்செய்யும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரதமர் திரு, மொரார்ஜி தேசாயுடனும், ராஷ்டிரபதியுடனும் பேச்சுக்கள் நடத்துவார். இலங்கை-இந்தியப் பொருளாதார உறவுகள் சம்பந்தமாகவே இப் பேச்சுக்கள் அமைந்திருக்கும்.

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பதவியேற்றதன் பின்னர் முதன்முதலாக இந்தியாவுக்கு விஜயஞ்செய்கிறார் (ம)

### பார்க்கீர் மாக்கார்

## புதிய சபாநாயகர்?

(கொழும்பு)

புதிய சபாநாயகராக பேருவளை எம். பி. ஜனப் பாக்கீர் மார்க்கார் தெரிவுசெய்யப்படலாம் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

தற்போது சபாநாயகராக விருககும் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், இம்மாதம் அமைச்சராக நியமனம் பெறுவதைத் தொடர்ந்தே. புதிய சபாநாயகர் தெரிவு இடம் பெறுகிறது.

### புதிய தபாலமைச்சர்

தபால், தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்கா காலமானதைத் தொடர்ந்து புதிய தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சராக பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரீ, பி. வெரப்பிட்டியா நியமிக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### வத்தளை எம். பி.

இதேநேரத்தில் வத்தளைத் தொகுதியின் புதிய பாராளுமன்ற உறுப்பினரார்க (ஐ. தே. கட்சி) சட்டத்தரணி ஏ. ஸி. டி. சொயிசா தெரிவுசெய்யப்படலாம் என்று ஐ தே. கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. வத்தளை தொகுதி எம். பியாகவிருந்த

[6-ம் பக்கம் பார்க்க]

## பஸ் கடலில் பாய்ந்தது!

## ஐவர் படுகாயம்!!

### பண்ணையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இ. போ. ச. பஸ் ஒன்று மண்டைதீவு சந்திக்கருகில் நேற்று அதிகாலை 4-55 மணிககு பண்ணைக் கடலுக்குள் பாய்ந்ததால் 8 பேர் காயமடைந்தனர். காயமடைந்த பிரயாணிகள் உடனடியாக யாழ் பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் நேற்றுக்காலை பண்ணை கடலுக்குள் பாய்ந்தது. 25 பிரயாணிகளுடன் வந்த மேற்படி பஸ்ஸில் சாரதி, கண்டக்டர் உட்பட 8 பேர் காயமடைந்தனர். நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நீரில் மூழ்கிய பிரயாணிகள் பலத்த கஷ்டப்பட்டு வெளியேறினர்கள். அவ்விடத்தில் நின்றவர்களும், பிரயாணிகளை கடலுக்குள்ளிருந்து மீட்டனர்.

யாழ். உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். இச் சம்பவம் பற்றி பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

தீவுப்பகுதி பிரயாணிகள் சங்க பிரதிநிதிகளும் சம்பவம்

[5-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு தையல்காரர் தேவை. சொந்த மெஷின் உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உரிமையாளர், வேல்முருகன் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி, கைதடி என்னும் முகவரிக்கு 20-9-1978 புதன் கிழமைக்குமுன் விண்ணப்பிக்கவும். 0301

யாழ். மாநகர எல்லைக்குள் இரு வருடங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்க: விளம்பர இல. 0312, C/o. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 0312

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நல்ல தண்ணீருடன் வீடு விலைக்குத் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 0305

பேராதனை வளாக கலைத் துறை மாணவி யாழ். வளாகம் அல்லது கொழும்பு வளாகத்துக்கு ஒத்து மாற விரும்புகிறார். உடன் விண்ணப்பிக்கவும். செல்வி ஸி. நடராஜா, மூன்றும் ஒழுங்கை, 39/18, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 0308

### விற்பனைக்கு

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கோபுரத்தின் முன்வீதியில் அமைந்துள்ள ''மில்க்வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிசாலையில் ''மில்க்வைற்'' தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பையும், மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். 0292

கோண்டாவிலில் 7 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S. T. சீவரட்ணம், C/o. விக்னேஸ்வரலிங்கம், சரோஜி வாசா, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 0307


யாழ். நகர வியாபாரிகளுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிறுவை முகத்தலளவைப்பகுதியினரின் ஓர் முக்கிய

## அறிவித்தல்

முத்திரையிடப்படாத நிறுவையளவைகள் படிகள் அளவுகோல்கள், கலன்கள் கொத்துகள் ஆகியஉபகரணங்களை உபயோகித்தல், தயாரித்தல், திருத்தஞ்செய்தல் விற்றல் பாரியகுற்றமாகும். மேற்கூறிய அளவைகளை வைத்திருப்பவர்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தில் நிறுத்தலளவை முகத்தலளவைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் பிற்பகல் 1-30 மணி தொடக்கம் 4-00 மணி வரை 1978ம் ஆண்டிற்கான முத்திரையை இட்டுக்கொள்ளவும்.

மீறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

க. சிவஞானம்,
ஆணையாளா.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்மாணம்,
6-9-78. 0311


### FOR SALE

One owner A50 EN 6000 series car for Sale. Highest offer considered. Contact on Saturdays or Sundays. —R. Sithamparapillai, Retired A. G. A. Kandy Road. Nunavil East, Chavakachcheri. 0291


யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

வெற்றுப்பரல்
வெற்றுக்கோண்ஸ்
கழிவு நூல்
கழிவு கடதாசி
கழிவு சீனி
கழிவு மா

ஆகியன.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 18-09-78.

மேலதிக விபரங்கட்கு தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

வே. சண்முகநாதன்,
பதில் பொதுமுகாமையாளர்.
74/3, அல்பிரட்
துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 செப்டம்பர் 11.
0309

தெல்லிப்பழை கிராமசபை வரியிறுப்பாளர்களுக்கு

## ஓர் முக்கிய வேண்டுகோள்

இச்சபையில் நடுக்கட்டு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய திருவாளர்கள் செ. சிவராசா, தா. பாஸ்கரலிங்கம் ஆகிய இருவரும் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கபபட்டுள்ளார்கள் என இத்தால் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதுடன் இவர்களிடம் வரிப்பணத்தைக் கொடுக்கவேண்டாம் எனவும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இவர்களிடம் பணத்தைக் கொடுத்தவர்கள் அனைவரையும் 10-10-1978-ந் திகதிக்கு முன் பற்றுச்சீட்டுகளுடன் இவ்வலுவலகத்திற்கு சமூகமளித்து அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளுடன் ஒப்பிட்டுச்சரிபார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். இன்று தொடக்கம் மேற்படி இரு நபர்களுடனும் செய்துகொள்ளப்படும் பணக் கொடுப்பனவுகளுக்கு இச்சபை பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்,

இ. முருகையா,
குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்,
விசேட ஆணையாளருக்காக,
தெல்லிப்பழை கிராமசபை.

தெல்லிப்பழை கிராமசபை
அலுவலகம்,
தெல்லிப்பழை,
1978-09-11. 0310

## திருமலையில் கப்பல்கட்டும் தளம்

(கொழும்பு)

திருக்கோணமலையில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை அமைக்க ஹாங்காங் முன்வந்துள்ளது.

இதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஹாங்காங்கிலிருந்து இங்குவந்துள்ள விசேட அதிகாரிகள் குழு ஒன்று திருமலையில் ஆராய்ந்து வருகிறது. (இ)

## தமிழ் மாணவர் மன்றத் தேர்தல்முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழக வெளிநிலைத் தமிழ் மாணவர் மன்றத்துக்கான தேர்தல் யாழ்ப்பாணம் வெளிவாரி பட்டப்படிப்புகள் நிறுவனத்தில் நடைபெற்றது. தலைவர் பதவிக்குஆறு பேர் போட்டியிட்டார்கள். திரு. எஸ். ரவீந்திரன் நான்கு மேலதிக வாக்குகளால் தலைவராகவும் செயலாளர் பதவிக்கு நடைபெற்ற நேரடிப் போட்டியில் திரு. எஸ். கே. சதாசிவம் செயலாளராகவும் பொருளாளராக திரு. த. சிவஞானரஞ்சன் 85 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். பத்திராதிபர் உதவிச் செயலாளர் பதவிகளுக்கு செல்விகள்; இராசமலர் நடராசா, இந்திராதேவி நடராஜா ஆகியோர் போட்டியின்றித தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவராக திரு. சு. யோகேந்திரனும் உபபத்திராதிபராக திரு. சி. திருச்செந்திநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள். நிர்வாக சபை உறுப்பினராக 8 பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள் வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றது. திரு. லாதீஸ் லோகநாதன் தேர்தல் அதிகாரியாகக் கடமையாற்றினர். [உ]

## காவலூரில் தேடப்பட்டவர்

### காங்கேசனில் கைது

[மாவிட்டபுரம்]

ஊர்காவற்றுறைப் பொலிசாரினல் தேடப்பட்ட நபர் ஒருவர் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் மாட்டிக் கொண்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பிள்ளையான் பாலசிங்கம் என்னும் நபர் பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தேடப்பட்டுவந்தார்,

காங்கேசன்துறைக்கு வந்த இந்த நபர் காங்கேசன்துறை பஸ் நிலையத்தில் நின்றபோது காங்கேசன்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. கியாஸ், கான்ஸ்டபிள்கள் வீரதுங்கா, பெர்னுந்து ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டி இரவு ரோந்துக்காக வீதியால் சென்றதுதான் தாமதம் அந்த நபர் ஓட்டம்பிடிக்க ஆரம்பித்தாராம். அவரைத் துரத்திப் பிடித்தபோது அவர் ஓர் திருட்டுப் பேர்வழி என்பது தெரியவந்தது.

காங்கேசன்துறைப் பொலிசார் இவரை ஊர்காவற்றுறை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். [உ]


அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஓர் நற்செய்தி

12-9-78 முதல் எமது தயாரிப்பான சுத்தமான உழுந்து மாவு றுத்தல் 3-50 சதமாகக் குறைத்துள்ளோம்.

M. G. M.

777, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்
0313


# வட்டுக்கோட்டையூர் முதுதமிழ்ப் புலவர்

என். கடம்பேசுவரன் --

மரத்தின் வளர்ச்சிக்கு மண்வளம் முதல் ஆதாரம். மனிதனின் வளர்ச்சிக்குத் தாய் முதல் ஆதாரம். மரம் மண்ணுக்குப் பயன்படுவதை விட உலகினர்க்குப் பயன்படுவதுபோல அறிஞனொருவன் தனிப்பட்டவர்களுக்கோ-தனித்த சமுதாயத்துக்கோ உரியவனல்ல; எல்லாருக்கும் பொதுச்சொத்தாகின்றான். நல்ல மண்வளம, நல்ல இயற்கையமைப்பை உருவாக்கும்; நல்ல இயற்யமைப்பு நல்ல மனே நிலையைத் தோற்றுவிக்கும். இவையொருங்கமைய, தாய் வளர்க்கும் வளர்ப்பில் அவன் உதித்த மண்ணும் பெருமையடைகின்றது. எனவே தான் ஓர் ஊரின் சிறப்புக்கு அவ்வூரில் வாழ்ந்த-வாழ்கின்ற அறிஞர்கள் முதலிடம் வகிக்கக் காண்கின்றேம்.

> வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பியின் நினைவு தினம் இன்றாகும். இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

எனவேதான் அறிஞனொருவன் உதித்த மண்ணில் உள்ளவர்கள்- அறிஞனொருவன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டுக்குட்பட்டவன்- அவன் ஒரு பொதுச்சொத்தாகிவிட்டவன் என்றிராது எமது மண் பெருமைப்பட வாழ்ந்தவன் என்ற எண்ணி எமது கடமையைச் செய்ய அவனைப் போலப் பலரை ஆக்கும் டணியில் ஈடுபட, எம்மால் ஆனவரை உழைப்போம்,

தென்னிந்தியாவில் ஈழத்தவரது புகழ்விளங்கக்காரணமாக இருந்த நல்லதப்பிப் பாவலர் வட்டுக்கோட்டையூரில்தோன்றிக் குறுகிய காலம் வாழ்ந்தவராயினும் உலகு பயனடைய வாழ்ந்தவர். எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் முருகுப்பிள்ளை என்பவருக்கு ஏழாவது புதல்வராகப் பிறந்தார். இளமையில் கவிபாடுந்தன்மை, நாடகம் நடிக்குந் தன்மை என்பனஇவரிடம்இருந்த சிறப்புக்களாகும்.

இவர் பயிற்பட்ட ஆசிரியயராய்த் தமது கடமையை ஆரம்பித்தார். இவரதுஆசிரிய சேவையில் -சாஹிராக் கல் லூரியில் இருந்தகாலம்- செய்த சேவை குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் தலைமைத் தமிழ்ப்பண்டிதராசவும் யாழ்ப்பாணம் ஆரிய பாஷா விருத்திச் சங்கம் முதலியவற்றில் பரீட்சகராகவும் இலங்கை வித்தியா பகுதிப்பாட நூற் பிரசுர சபைத் அங்கத்தவராகவும் கடமைபுரிந்தார். கற்றுரைக் கற்றுரே காமுறுவர் என்பதற்கொப்ப இவர்பால் சுவாமி விபுலானந்தர், தென்னிந்திய அறிஞரான மணி திருநாவுக்கரசு போன்றேர் அன்பு பாராட்டினர். சுவாமி விபுலானந்தர் இவரைப் பற்றிக்குறிப்பிடுகையில்,

''......மனதுக்கினிய பெருங் குணத்து நல்லதம்பிப் பாவலன் என்று அழியாச் செய்யுளால் நற்சான்று பகர்ந்துவிட்டேன். நீங்கள் எந்நாளும் தமிழ்த் தொண்டு புரியவேண்டும்......தமிழ்ப் புலவராகிய நாம் கம்பனின் வழித்தோன்றல்கள் அவனைப்போல நாமும் மன்னனின் முன்னிலையில் ஏமாப்புடன் நிற்கவேண்டும் ........நூலாராய்வதிலும் நூல் எழுதுவதிலும் பொழுது கழிக்குப்படி பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்......''

புலவர் அவர்களும் இனப துன்ப வலைகளில் தன்னை மாட்டிக்கொண்டு அற்ப வாழ்க்கைத் தேவைகளை தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொள்ளாது, உயர்ந்த இலட்சியங்களை மனதிற்கொண்டு இன்பம் துன்பம் இரண்டையும் ஒப்ப நோக்கி உயர்ந்தவா.

புலவர் அவர்கள் முஸ்லிம் புலவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து பல அரிய விடயங்களைத் தமது உரைகள் வாயிலாக வெளியிட்டுள்ளார். ஆதலால் இவர் முஸ்லிம்பால் ஈடுபாடுடையவர் என்பது புலனகும். கரீம் புலவா, பக்கீர். முஹைதீன் புலவர் முதலிய இலங்கைப் புலவர்களைப் பற்றியும் குற்ப்பிட்டுச் செல்வதை நாம் உணரலாம்.

1936 ம் ஆண்டு தென்னிந்திய புனித க்ஷேத்திரங்களுக்கு யாத்திரையை மேற்கொண்டார். அங்கு மேடைகள் தோறும் பிரசங்கங்கள் பொழிந்தார். சைவ ஆதீனங்களுடன் தொடர்புகொண்டு தமிழுக்கு அரியசேவை செய்தார். இவரது பாவன்மையையும் நாவன்மையையும் புலமைத் திறனையும் வியந்த தென்னிந்திய திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தார் 1940 ல் முதுதமிழ்ப் புலவர் என்னும் வரிசையை நல்கிக் கௌரவித்தார்கள்.

சில ஆண்டுகளின் பின்னர் ஈழநாட்டிற்குத் திரும்பிய புலவரை இலங்கைப் பல்கலைக் கழகத்தார் சேவையில் அமர்த்தினர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இருந்து அரிய சேவை செய்தார். இவரது கவித்துவ ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக இலங்கை அரசாங்கம் நடாத்திய மரதனஞ் சலோட்டக் கவிதைப்போட்டியில்முதற் பரிசைப் பெற்றுக் கொண்டமையைக் குறிப்பிடலாம். இவர் தமிழறிஞராக விளங்கியபோதிலும் ஆங்கிலம், சிங்களம் முதலாய வேறு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிலங்கினர் என்பதற்குச் சான்றாக இவரால் சிங்களத்திலிருந்து தமிழுக்குப் பெயர்க்கப்பட்ட இலங்கையின் தேசிய கீதம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

# தீப்பற்றிய வீட்டில் வயோதிபர் கருகி மரணம்

## பலாலியில் சம்பவம்

(மாவிட்டபுரம்)

வீடு தீப்பற்றியபோது வீட்டினுள் படுத்திருந்த வயோதிபர் ஒருவர் உயிருடன் எரிந்து பரிதாபகரமாக மரணமான சம்பவம் ஒன்று பலாலியில் இடம்பெற்றுள்ளது.

பலாலியைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னையா (80 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு ஸ்தல விசாரணை நடத்தினர்.

அச்சமயம், காலமான வயோதிபர் நோயினல் பீடிக்கப்பட்டு நடமாடாத நிலையில் படுக்கையில் இருந்து வந்தாரெனவும், சம்பவதினம் அவரது மனைவி தேநீர் தயாரித்துக் கொடுத்துவிட்டு வெளியில் செல்லவே அடுப்பிலிருந்த நெருப்பு வீட்டில் பற்றிக் கொண்டதாகவும், எரிகின்ற நேரத்தில் வீட்டினுள் புகுந்து வயோதிபரை வெளியேற்ற முடியாத நிலையிலிருத்தமை

(5ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
The Eelanaadu

### எழுத்தாளர்களுக்கு உதவி

இலக்கியம், ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும் வளர்வதற்கு இலக்கியகர்த்தாக்கள் ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும்.

இலக்கிய கர்த்தாக்கள் ஆரோக்கியமாக வாழ்தல் என்று கூறும்பொழுது முக்கியமாக அவர்களது பொருளாதாரநிலை நன்றாகஇருக்க வேண்டுமென்பதையே குறிப்பிடுகின்றோம்.

முடியாட்சியின்போது இலக்கிய கர்த்தாக்களுக்கு மன்னர்களும் பிரபுக்களும் மனமுவந்து தாராளமாக உதவிபுரிந்தார்கள். அதன் காரணமாக ஆரோக்கியமான இலக்கியங்கள் பிறந்தன. அவை இன்றும்கூட நிலைத்து நிற்கின்றன.

இன்றைய நிலையில் அதே போன்ற இலக்கியங்கள் தோன்ற முடியாது என்பதில்லை. ஆனால் இலக்கிய நூல்களை வெளியிடுவதில் உள்ள சிரமங்களே இலக்கிய கர்த்தாக்களின் மென்னியைப் பிடித்து ஆட்டுகின்றன. இதன்காரணமாக திறமை இருந்தும்கூட ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபடுவதற்கு எழுத்தாளர்கள் பலர் தயங்குகின்றனர்.

இந்த நிலைமையில் அரசு ஏதும் உதவிசெய்யாதா என்று ஆவலுடன் எதிர்பார்ப்பது இயற்கையே.

கடந்த காலங்களில் அரசு இந்தத்துறையில் உதவிகள் புரியவில்லையென்று சொல்ல முடியாது. ஆனால் உதவி தேவைப்பட்ட அனைவருக்கும் அது கிடைத்ததா என்பதே கேள்வி.

ஒரு கோட்பாட்டுக்குள் கோடுபோட்டுக் கொண்டு நிற்கும் சிலருக்குத்தான் இந்த உதவி என்ற நிலை நீடிக்குமானால் ஆரோக்கியமான, சுதந்திரமானஇலக்கியங்கள் பிறப்பது முயற்கொம்புதான்.

இதனையே அண்மையில் மமாதம்பையில் நடைபெற்ற சாகித்தியவிழாவில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலக்கிய வளர்ச்சியில் அரசாங்கம் தலையிடலாகாது. எழுத்தாளர்கள் தம் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட வசதியிருக்க வேண்டும் என்று திரு. ஜயவர்த்தன கூறியிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில் இலக்கிய - கலாசார வளர்ச்சிக்கென கூடுதலான நிதிஉதவிகளை கலாசார அமைச்சின்மூலம் வழங்குவதற்கு அடுத்த ஆண்டுமுதல் ஏற்பாடு செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அரசியல் தலையீடு இன்றி சுதந்திரமான இலக்கிய ஆக்கங்களை உருவாக்க முனையும் எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் ஜனாதிபதியின் இந்த வாக்குறுதி நம்பிக்கையூட்டுவதாக இருக்கும்.

### மணிவாக்கு

நீ முதலில் உன்பேச்சை அடக்கு. எப்போதும் பேசிக் கொண்டே வியாபாரத்தைக் கவனிக்காத வியாபாரி லாபத்தை அடைய முடியாது.

- ஸ்ரீகிருஷ்ணப்ரேமி

# "தனிநாட்டை அமைப்பதற்கு முன் பொருளாதார சுபீட்சம் தேவை"

## தேசிய இளைஞர்மன்ற இயக்குநர் வலியுறுத்து

(மாவிட்டபுரம்)

**"தனிநாட்டுக்கு முன் எமது பகுதிகளின் பொருளாதார சுபீட்சத்திற்கு நாம் வழி வகுக்க வேண்டியவர்களாக உள்ளோம்"**

**இவ்வாறு தேசிய இளைஞர்மன்ற இயக்குநர் திரு. என். கனகசூரியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஊறணியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

யாழ். மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளிலும் மாதிரி சனசமூக நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கு சமூக அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை வழங்குமுகமாக யாழ். மாவட்ட சனசமூக நிலைய அபிவிருத்தி முன்மாதிரி செயல் திட்ட ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு வி. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார்.

திரு. கனகசூரியர் மேலும் பேசுகையில், "தேசிய சேவை இளைஞர்மன்றம் வடபகுதியில் 10 லட்சம் ரூபாவை செலவிட முடிவு செய்துள்ளது. இப்பண உதவியுடன் சிரமதான அடிப்படையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு இந்த நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு உழைக்க இளைஞர்கள்முன்வரவேண்டும்இந்த சேவைகளுக்கு வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்தாசை அளிக்க வேண்டும்.

தேசிய சேவை இளைஞர்மன்றத்தின் நோக்கம் இந்த நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்காக உழைப்பது தான். இந்த வகையில் தமிழ் மக்களதும், தமிழ்ப் பகுதிகளினதும் முன்னேற்றத்திற்கு மன்றம் முடிந்த உதவிகளை நல்கும். வடபகுதியில்அபிவிருத்திவேலைகளை மேற்கொள்ள 10 லட்சம் ரூபா வரை செலவளிக்க இம்மன்றம் தயாராயுள்ளது. இப்பண உதவியுடன் சிரமதான அடிப்படையில் பொதுக்கிணறு, மலசலகூடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற பல்வேறு தேவைகளையும், கைத்தொழில் திட்டங்களையும் செயல்படுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நமது மக்கள் நன்கு பயன்படுத்தவேண்டும். இந்த அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் சிரமதானத் தொண்டர்களுக்கு நாளொன்றுக்கு 5 ரூபா வேதனமும் வழங்கப்படும்.

இன்று தனிநாடு பற்றிப் பேசப்படுகிறது. தனிநாட்டுக்கு முன் எமது பகுதிகளின் பொருளாதார சுபீட்சத்துக்கு நாம் வழி வகுக்கவேண்டியவர்களாயுள்ளோம். தேசிய சேவை இளைஞர்மன்றம் மூலம் வடபகுதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்காக வடபகுதி எம். பிக்களிடம் விபரங்கள் கோரினோம். எவரும் இதில் அக்கறை கொள்ளவில்லை. வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு மட்டும் குளம் ஒன்றின் புனரமைப்புப் பற்றிய விபரத்தை சமர்ப்பித்திருந்தார். ஆகவே பணம் ஒதுக்கினால் மட்டும் போதாது திட்டங்களை செயல்படுத்த எம். பிக்கள், பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்களது ஒத்துழைப்பு மிக அவசியம்" என்றார்.

இலங்கை பனந்தொழில் அபிவிருத்திச்சபை இயக்குநர் திரு. சி. வேலாயுதம் பேசுகையில், சமுதாயப் பணியில் சனசமூகநிலையங்கள் பெரும் பங்கு வகிக்க முடியும், சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலைகளாக மட்டும் இருக்காது மக்களுக்கு அறிவூட்டும் சிறந்த பொக்கிசங்களாக விளங்க வேண்டும். பாலர் கல்வி நிலையங்கள் நடத்துதல், உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்துதல் போன்ற பல்வேறு வகையான சேவையில் அவை ஈடுபடவேண்டும் என்றார்.

சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கே. பொன்னம்பலம், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா உட்படப் பலர் பேசினர்.

திரு. வை. கந்தசாமி நன்றி கூறினார். (உ)

## இன்று துர்க்காதேவி ரதோற்சவம்

(மாவிட்டபுரம்)

பிரசித்திவாய்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ரதோற்சவம் இன்று புதன்கிழமை வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்திற்கென தேர் இல்லாத குறைதீர இவ்வாண்டு லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேரில் துர்க்காதேவி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் கொடுப்பார்.

ரதோற்சவ நிகழ்ச்சியில் பண்ணிசைக் கச்சேரிகளும், விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகளும்இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் கூடும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்வதற்காக அன்னதானமடம் ஒன்றும் அமைக்கப்பட்டு ஆலய நிர்வாகசபை தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்துவைக்கப்பட்டுள்ளது; இம்மடத்தில் அன்னதானம் இடம்பெறும்.

துர்க்காதேவியின் புதிய தேர்த்திருவிழாவான இன்று அம்பிகையின் அடியார்களுக்கு 'திருவருட்கவிமாலை' என்னும் பக்தி நூல் அன்பளிப்பாக ஆயிரம் பிரதிகள் வழங்கப்படவுள்ளன.

அருட்கவி சீ. விநாசித்தம்பி எழுதிய இந்நூலைக் காரைநகர் அச்சகத்தில் அழகிய முறையில் அச்சிடுவித்து அடியார்களுக்கு அன்பளிப்பாக வழங்குபவர் காரைநகர் ஆலடியைச் சேர்ந்தவரும், நொச்சிகாமம் வர்த்தகருமாகிய திரு. மு. பொன்னுத்துரையாவார்.

கவிஞர் வி. கந்தவனமும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், சாயிமாதா சிவ. பிருந்தாதேவியும் நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். (உ)

## ஆசிரியருக்குக் கடிதம்:

# ராமாயண காலத்திற்கு முன்பே வேதங்கள் இருந்துள்ளன

"சமஸ்கிருத மொழியே வைதிக உபகண்டத்தில் முதன்முதல் தோன்றிய மொழி. இம்மொழியே வைதிக உபகண்டத்தில் குடியேறிய மக்களின் முன்னேற்றத்துக்கு அடிப்படையான மொழியாகும்.

விடயம்பற்றி நான் சமீபத்தில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் ஓர் உரையாற்றினேன். நான் கூறியதன் விபரத்தை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

சிந்துவெளியில் கண்ணன் வழிபாடும் சிவலிங்கவழிபாடும் நிலவியிருந்தபடியால், சிவலிங்கபூசை செய்த அர்ச்சுனன் நடாத்திய மகாபாரதப்போர் சிந்துவெளி நாகரிக காலத்திற்கு முற்பட்டது. மகாபாரதபோருக்கு முற்பட்டது. இராம - இராவண யுத்தம் கௌசலை சிவனைவழிபட்டாள் என்று கூறப்படுகிறது.

இராமாயணத்தில் அகத்தியர் இடம்பெறுகிறார். டாக்டர் ஆனந்தகுருகே தமது இராமாயண சமுதாயம் என்ற நூலில் கூறுவதாவது:

தென்னிந்திய நாட்டுக்கதைகளில் அழியாவரம்பெற்ற முனி சிரேட்டராகிய அகத்திய முனிவராலேயே ஆரிய நாகரிகம் என்னும் தீபம் தெற்கே கொண்டுவரப்பட்டது. ஆதித் தமிழ் இலக்கணத்தையும் அவரே செய்தார் எனக்கூறப்படுகிறது. வடமேற்குப் பாடந்தரத்தில் மட்டும் காணப்படும். இராம-அகத்திய சம்பாஷணையில் அகத்தியர் தென்னிந்தியாவை ஆரியமயமாக்கச் செய்த எத்தனங்கள் குறித்துக் கூறப்படுகின்றது. இது பற்றியே இராமாயணத்தில் அகத்தியர் மகிமை பெறுகிறார். தென்னிந்திய வாசிகளுள் முன்னேற்றமடைந்த சில வகுப்பினர் இம்முனிவர்களோடு தொடர்புகொண்டு வேதச்சடங்குகள்போன்ற ஏற்பாடுகளையும் சமஸ்கிருத மொழியையும் பெற்றிருத்தல் சாலும்."

இராமாயண காலத்திற்கு முன்பே வேதங்கள் இருந்தன என்பதையும் ஆரியனாகிய அகத்தியர் முதன்முதல் தமிழ் இலக்கண நூலை வகுத்தார் எனவும் நாம் இதனால் காண முடிகிறது. ஆனால் வேத காலம் தொடக்கம் தமிழ் மொழி பேசப்பட்டதாகதமிழ் வரலாற்றில் ஆதாரங்கள் இல்லை. சிவனடியார்கள் எல்லோரும் வேதங்களையும் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் சிவபெருமானையும் போற்றினார்கள்.

கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் தமது வடஇலக்கிய வரலாற்றில் எழுதியுள்ளதாவது: 'உலகில் கிடைக்கக்கூடிய நூல்கள் யாவற்றுள்ளும் வேதங்களே பழமை மிக்கவை. இவற்றுள் மிகப் பழைமைசான்றது இருக்குவேதம் என ஆராய்ச்சியாளர்கள் ஒருமுகமாகத் துணிந்து முடிவு கூறியுள்ளார்கள். எழுத்துக்கலை தோன்றுவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முந்தியது வேதகாலம்.'

இருக்குவேதம் தெரியாத சிந்து மக்களாகிய திராவிடர் எனப்படுவோர் லிங்க வணக்கத்தை எப்படி மேற்கொண்டார்கள்? சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கங்கள் சிந்துவெளியில் ஆரியர்கள் இருந்த காலத்தனவாதல்வேண்டும். ஆரியர்கள் இருந்த காலத்தனவாதல் வேண்டும். ஆரியர் சிந்துவெளிக்கு வரும்பொழுது அங்கிருந்தமக்கள் உருவ வழிபாட்டினர். வேள்விசெய்யாதவர்கள் என்பதை நாம் அறிகின்றோம்.

சப்தரிஷிகளும், பின் சந்திர ரிஷியும், அவருக்குப்பின் விஸ்வாமித்திர ரிஷியும் வேத பஞ்சாங்கத்தை வகுத்தனர். சந்திர ரிஷிக்கும் விஸ்வாமித்திர ரிஷிக்கும் இடையுலுள்ள கால வித்தியாசம் 1500 வருஷங்கள். அவர்களுக்குப்பின் வியாசருடைய தந்தையாகிய பராசரர் சோதிடவிதிகளை அமைத்தார்.

சப்தரிஷிகள் ஆரியர்கள், பாண்டவர்கள் ஆரியர்கள் அவருடைய பாஷை சமஸ்கிருத பாஷை. இந்து சமயம் ஆரியசமயம் பிராமணர்களும் ஆரியர்களே. சிந்துவெளித் திராவிடர்களிடையே பிராமணர்கள் இல்லை. சிந்துவெளியில் கண்டெடுக்கபபட்ட 511 முத்திரைகளில்உள்ள எழுத்துக்கள் சமஸ்கிருத எழுத்துக்கள் என்று பேராசிரியர் பி. பி.சக்கரவர்த்தி தான் 1676ம் ஆண்டு எழுதிய நூலில் காட்டியுள்ளார். சிந்துவெளிக்குச் சென்ற ஆரியர்கள் அயோத்தியிலிருந்து சென்றதாகவும் பேராசிரியர் சர்க்கரவர்த்தி கூறுகிறார்.

இந்தியாவின் ஆதிக்குடிகள் நிக்ரோவர் ஆவர். இந்த நிக்ரோவர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். பல பட்டதாரிகளிடையே அறியாமை என்னும் இருள் இருக்கிறதென்றால் நாம் மற்றவர்களைபபற்றி பேசவும் வேண்டுமா!

டாக்டர் ஆ. தர்மலிங்கம்
காரைநகர்.

## இணைப்பு பஸ்சேவை

(வவனியா)

தலைமன்னார் இறங்குதுறைக்கு இந்தியாவில் இருந்து கப்பல் வந்துசேரும் தினங்களாகிய திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் இந்தியா சென்று வரும் யாத்திரிகர்களினதும் உல்லாசப்பிரயாணிகளினதும் போக்குவரத்து வசதியை முன்னிட்டு தலைமன்னாரிலிருந்து அதிகாலை 2-30 மணிக்கு வவனியா ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பஸ் சேவை ஒன்று வவனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் யாழ்ப்பாணத்திற்கு 10-15 மணிக்குச் செல்லும். (உ)

காசோலை மோசடி

## இருவருக்கு ரிமாண்ட்

(மட்டுவில்)

காசோலை மோசடி தொடர்பாக சந்தேக நபர்களான தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச்சங்க ஊழியர் இருவரை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் இம்மாதம் 17ம் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கைதவறிய காசோலைப்புத்தகம் ஒன்றைக் கண்டெடுத்து அதன்மூலம் 30 ரூபாவைப் பெற முயன்ற பொழுது மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வடஇந்திய மாநிலங்களில்

# வெள்ளத்தின் சீற்றம் இன்னமும் தணியவில்லை

## அகதிகளுக்கு உதவ பாக். விமானங்கள் வந்துள்ளன

புதுடில்லி, செப். 12

வடஇந்திய மாநிலங்களில் இன்னும் வெள்ள அபாயம் நீங்கவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

பீகார், உத்தரபிரதேசம், மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களிலேயேவெள்ளஅபாயம் இன்னும் நீங்கவில்லை.

வடஇந்திய மாநிலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பாகிஸ்தான் முன்வந்துள்ளதென்றும் பாகிஸ்தானிலிருந்து இரண்டுவிமானங்கள் மருந்து, உணவு, புடவை ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு இந்தியா வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### நிவாரண உதவி நிதி

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அமெரிக்க எழுத்தாளர்சங்கம் இந்தியஅரசிடம் 10 லட்சம்ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் தமது நிதியிலிருந்து 5ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (இ)

---

# "மொழி, இனப் பிரச்னைகள் வெவ்வேறு பட்டவை"

## -- வி. பொன்னம்பலம்

(வெள்ளவத்தை)

"இன்று தமிழ்ப்பேசும் மக்கள் எதிர்நோக்கியிருப்பது மொழிப்பிரச்னை மாத்திரமல்ல. புதிய அரசமைப்பின் மூலம் மொழிப்பிரச்னை தீர்ந்துவிட்டது என்று கூறுகிறார்கள். மொழிப்பிரச்னை வேறு இனப்பிரச்னை வேறு. மொழிப்பிரச்னையைத் தீர்த்துவிட்டால் மாத்திரம்இனப்பிரச்னை தீர்ந்துவிடாது."

இவ்வாறு வெள்ளவத்தை இராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் பேசுகையில், செந்தமிழர் இயக்கத்தின் பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் கூறினார்.

"இன்றையதமிழன் நிலையும் நாம் காட்டும் பாதையும்" என்ற தலைப்பில் திரு பொன்னம்பலம் மேலும் பேசுகையில்,

'தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும் பொருளாதாரப் பிரச்னை உண்டு. வேலையில்லாத்திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற பிரச்னைகளை இரண்டுஇனங்களுமே கொண்டிருக்கின்றன. நாட்டிலுள்ள சகல மக்களும்பொருளாதாரப் பிரச்னையால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே நாட்டில் சகல பாகங்களிலும் வாழும் முற்போக்கு சக்திகள்தமிழ்ப்பேசும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை எடுத்துக்கூறி அவர்கள் அவர்கள் அவற்றை ஆதரிக்கச்செய்ய வேண்டும், என்றார். (உ)

---

வங்கியிலிருந்து நகர்வாலா பெற்ற

# 60 லட்சம் ரூபா பணம் திருமதி காந்தியினுடையது

## மொரார்ஜி தேசாய் கருத்து

புதுடில்லி, செப். 12

"வங்கியிலிருந்து நகர்வாலா பெற்றுக்கொண்ட அறுபது லட்சம் ரூபா பணம், திருமதி இந்திராகாந்திக்கு சேர்ந்ததாகவே இருந்திருக்கும்" என்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இன்று ஜெகன்மோகன் ரெட்டி கமிஷன் முன்பாக சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

"தொலைபேசி அழைப்பு வந்த அரைமணி நேரத்தில் அறுபதுலட்சம்ரூபாவை வங்கியிலிருந்து மனேஜர் எடுத்துக்கொடுத்திருக்கிறார். இவ்வளவு தொகைப்பணத்தை, காசோலை, டிராவ்ட், அல்லது வவுச்சர் இல்லாமல் பெறமுடியாது. திருமதி இந்திரா காந்திக்குச் சொந்தமாக இருந்ததினால்தான் அவ்வளவுவிரைவாக அத்தொகையை நகர்வாலா பெற்றுள்ளார்" என்றும் பிரதமர் தேசாய் குறிப்பிட்டார்.

---

## பௌர்ணமி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை நடாத்தும் பௌர்ணமி கலைவிழா இம்மாதம் 16ம் தேதி யாழ்ப்பாண வர்த்தகர்களின் ஆதரவுடன் நடைபெறவிருக்கிறது. (க)

---

## பம்பாய் கர்தினால் காலமானார்!

பம்பாய், செப். 12

பம்பாய் கர்தினால் வெலரியன் கிறேஷியஸ் நேற்று பம்பாயில் தமது 79-வது வயதில் காலமானார்.

இந்தியாவின் முதலாவது கர்தினாலாக 1952ம் ஆண்டு நியமிக்கப்பட்ட வெலரியன் கிறேஷியஸ் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகவும் மனிதகுலத்தின் நல்வாழ்வுக்காகவும் பெரும்தொண்டாற்றினார்.

சிறிதுகாலம் இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். [இ]

---

## சங்கானை பெண் கடத்தல்;

# எவரும் அடையாளம் காணப்படவில்லை

(மாவிட்டபுரம்)

சங்கானை பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற இளம்பெண் கடத்தல் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணி வகுப்பில் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் கோஷ்டியொன்றினால் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சைமன் அன்ரன், சைமன் யோகதாஸ், கனகு கனரத்தினம் ஆகியோருக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. அ. குமரகுரு முன்னிலையில் அடையாள அணி வகுப்பு நடைபெற்றது. அச்சமயம் கடத்தப்பட்ட இளம்பெண்ணும், அவரது தந்தையும் சகோதரர் இருவரும் அடையாளம் காண அழைக்கப்பட்டும் எவரையும் அடையாளம் காணவில்லை.

இதையடுத்து இவர்கள் மூவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி அனுமதித்தார்.

1ம், 2ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள், ஆர். ஜே. செல்வரத்தினம், எஸ்.தேவதாசன் ஆகியோரும் 3ம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி கே. விநோதனும் ஆஜராகினர்.

மேற்படி இளம்பெண் கடத்தல் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்ட கிருஷ்ணன் அழகராஜா, கிருஷ்ணன் துரைராஜா, வயிரவன் சின்னராஜா, சின்னப்பு சின்னராஜா, இளையவி நாகராஜா, சின்னத்துரை செல்வரத்தினம் தில்லைநாதன் உதயபுத்திரன் ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே சரண்புகுந்ததையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (உ)

---

## மக்கள் வங்கி பணிக்கு பாராட்டு

(புங்குடுதீவு

மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து அவர்களின் வாழ்க்கையை பொருளாதாரத்துறையில் உயர்த்திவைப்பதற்காகவே மக்கள் வங்கிகள் நமது நாட்டில் இயங்கிவருகின்றன. மக்கள்வங்கியின் கிளைகள் குடாநாட்டின் பலபாகங்களிலும் நிறுவப்பட்டு பொதுமக்களுக்கு கடன்வசதிகள் முதலியனவற்றை செய்து வருகின்றன.

மேற்கண்டவாறு புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டிடத்தில் மக்கள் வங்கியின் புங்குடுதீவுக் கிளையைத் திறந்து வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. இ. நடராஜா தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் யாழ்- அரசாங்கஅதிபர் திரு.லயனல் பெர்ணாண்டோ பேசும்போது மக்கள் வங்கிகள்வசதி குறைந்த மக்களை வாழ்க்கைப்பயணத்தில் வெற்றிநடைபோட வைப்பதற்கே பணியாறுகின்றன. இந்தவங்கியின் பணிகளைப் பேணி வங்கியையும் தம்மையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது இப்பகுதி மக்களின் கடமை என்றார்.

பேராசிரியர் கு. நேசையா உரையாற்றும் போது தாழ்வுற்று வறுமை மிஞ்சிக்கிடக்கும் பகுதிகளில் தொழில் வளர்ச்சி விவசாய கலைகலாசாரவளர்ச்சி ஆகியவற்றினை கட்டிவளர்ப்பதற்காகவே மக்கள் வங்கிக்கிளைகள் அமைத்து பணியாற்றிவருகின்றது என்றார்.

மக்கள் வங்கியின் புங்குடுதீவுக்கிளைமுகாமையாளர் திரு. எஸ். செல்லையா பேசும் போது மக்கள் வங்கி புங்குடுதீவு மக்களுக்கு பாரபட்சமின்றி பணியாற்ற அமைக்கப்படடுள்ளது என்றார். (உ)

---

# ராதாபாய்மீண்டும் உண்ணாவிரதம்

பாண்டிச்சேரி, செப். 12

பாண்டிச்சேரி சட்டசபையை பெரும்பரபரப்பில் ஆழ்த்திய திருமதி ராதாபாய் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

தம்மீது களங்கம் ஏற்படுத்த முற்பட்டதாக அமைச்சர் ராமச்சந்திரன் மீது தாம்சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இதுவரை பாண்டிச்சேரி அரசு விசாரணைகளை மேற்கொள்ளாததை ஆட்சேபித்தே திருமதி ராதாபாய் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமது நிலை குறித்து திருமதி ராதாபாய் ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டிக்கும் அறிவித்துள்ளார். [கெ-இ]

---

## பொன். கந்தையா நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17-ம் திகதி காலஞ்சென்ற முன்னாள் பருத்தித்துறை எம். பி. பொன்.கந்தையாவின் நினைவு தினம் உடுப்பிட்டியில் கொண்டாடப்படும்.

வடபகுதியின் ஒரே ஒரு எம்.பியாக கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் தெரிவான இவரின் ஞாபகார்த்த வைபவத்தில் கம்யூனிஸ்ட்கட்சி பிரதி பொதுச்செயலாளர் திரு.கே. பி. சில்வா பங்குபற்றுவார்.

திரு. கே. பி. சில்வா 16-ம் 17-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து முதல்நாள் யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட்கட்சிக் கிளைகள் ஒழுங்கு செய்யும் கருத்தரங்குகளிலும் மறுநாள் பொன் கந்தையா நினைவுதின வைபவங்களிலும் பங்கு பற்றுவார் (கூ-உ)

---

காம்ப் டேவிட்

# மத்திய கிழக்கு பேச்சு: 2 நாட்களில் முடிவு தெரியும்

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

மேரிலண்ட், செப். 12

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக காம்ப்டேவிட்டில் 2வது வாரமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் முடிவு இன்னும் இரு தினங்களில் தெரிந்துவிடும் என்று வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்'

பேச்சுவார்த்தைகள் இப்போது மிக முக்கியகட்டத்தில் உள்ளதென்றும் அது குறித்து இப்போது தீர்க்கமாக எதுவும் கூற முடியா திருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே வெள்ளைமாளிகை அதிகாரி மேற்கூறியவாறு தெரிவித்திருந்தார்.

ஜோர்டானின் மேற்குக் கரையோரக் குடியேற்றம் இஸ்ரேலியருக்கு பாதுகாப்பு போன்ற சில விவகாரங்களே மத்தியகிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் முட்டுக்கட்டையாக உள்ளன என்றும் வெள்ளைமாளிகை அதிகாரி தெரிவித்தார்.

### கார்ட்டர்-சதாத் இரகசிய சந்திப்பு

இதேவேளையில் ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தைச் சந்தித்து சுமார் 2மணி நேரமாக அந்தரங்கமாகப் பேச்சு நடத்தினர். (இ)

---

## பரு. லயன்ஸ் கழக அறிவியல் போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை லயன்ஸ் கழகக்கிளையின் ஆதரவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் எதிர்வரும் 17ம் திகதி முற்பகல் உயர்தர வகுப்பு மாணவர்க்கு அறிவியல் போட்டி நடத்தப்படும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அன்று பிற்பகல் விவசாயக்கவியரங்கம் பட்டிமன்றம் என்பனவும் இக்கிளையால் நடத்தப்படும். (உ)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Friday Foster

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி—மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி
ராமன் எத்தனை ராமனடி

## அடைக்கல மாதா திருநாள்

(மன்னுர்)

மன்னுர் எழுத்தூர் பரிசுத்த அடைக்கலமாதா திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை நடைபெற்ற பாடற்பூசைப் பலியைத் தொடர்ந்து பரிசுத்த அடைக்கலமாதா திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் திருவிழா முடிவுற்றது. (உ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மானிப்பாய் கிளை அலுவலகத் திறப்புவிழா இன்று மாலை நடைபெறும்.

மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் திறந்துவைப்பார். (உ)

வெற்றி முரசு கொட்டும் 2வது வாரம்!
சாந்தி (யாழ்நகர்)
போன்: 7642.
தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா (புத்தம் புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா நடித்த
சாந்தி

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார்
ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

REGAL Jaffna 5th&LASTCROWDEDWEEK
Phone: 360
Daily 4-30, 7-00.& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜு நடித்த
பேரும் புகழும்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
இது சத்தியம்
15-9-78 முதல் ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
டி.ஆர்.மகாலிங்கம்-குமாரிருக்மணி
ஸ்ரீ வள்ளி

## இன்றைய இராசிப்பலன்

**ஆவணி மாதம் 28-ந் திகதி புதன்கிழமை**

(13-9-78)

**மேடம்:-** நீண்ட நாள் பிரச்னைகளுக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும், தாய்வழி மூலம் தன வரவுக்கும் இடமுண்டு, சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம், முன்னேற்றமான தினம்.

**இடபம்:-** புத்திரவழியால் புகழுக்கு இடமுண்டு, புதிய பாதையில் நடைபோடுவீர்கள் சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும், பொதுவாக நல்ல தினம்.

**மிதுனம்:-** வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும், உடல்நலத்தைம் பேணிக் கொள்ளவும்.

**கடகம்:-** போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள், களஸ்திரவழியில் பெருமைகள் வந்துசேரும், ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதம் ஒன்று கிடைக்கலாம், தொழில்துறையிலும் வெற்றிக்கிடமுண்டு.

**சிங்கம்:-** எண்ணியதில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் தாக்கும், அவசரப் போக்கினுல் ஆபத்து விளையும், நிதானம் வேண்டும்.

**கன்னி:-** இதயம் இன்று இன்பத்தால் விம்மும், குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும், புத்திரர்களாலும் மதிப்புக்கிடமுண்டு, சுமுகமான தினம்.

**துலாம்:-** வியாபார விருத்திக்கிடமுண்டு, வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் தென்படும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், புத்திரர்வழியாலும் புதினம் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும், பிதாவழிச் சுகம் கிடைக்கும், கைத்தொழில் விருத்திக்கிடமுண்டு, முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

**தனுசு:-** தொழில்புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்ளுவீர்கள். பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**மகரம்:-** அன்னியவாசம் அமைதிக்கு உலை வைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுவீர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவும், தெய்வ நம்பிக்கை சிறந்த பயன் தரும்.

**கும்பம்:-** அறவழிகளை மனம் நாடும், பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செலவுக்கு இடமுண்டு, சுற்றுடலில் மதிப்புக்கிடமுண்டு, சிலருக்கு காதல் துறையிலும் அனுகூலம் தென்படும்.

**மீனம்:-** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும், நண்பர்களின் தொல்லைகளினுல் நஷ்டத்திற்கு இடமேற்படலாம், தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டிய நிலைமையும் உண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டு கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீமாக முத்துமாரி அம்பாள் கோயில் மகாகும்பாபிஷேகம் நாளைநடைபெறவிருக்கின்றது. (வ)

# வீடு தீக்கிரை: ரூ.5000 நஷ்டமாம்

(மாவிட்டபுரம்)

சகோதரி வீட்டுக்கொண்டாட்டத்திற்குப் போய்விட்டு திரும்பிய நபர் ஒருவர் தமது வீடு தீக்கிரையாகியிருந்தது கண்டு திகைப்படைந்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த பிரகாசம் ஆரோகியநாதன் என்பரது வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தமது சகோதரி வீட்டில் இடம்பெற்ற பணவரவுக் கொண்டாட்டத்திற்குச் சென்று விட்டுவந்து பார்த்த சமயம் அவரது வீடு தீக்கிரையாகி இருந்ததையடுத்து அவர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்துள்ளார்.

தமது வீடும் உடைமைகளுமாக சுமார் 5000 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளார். பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ)

## பஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடந்த இடித்தைாம் காயமடைந்தவர்களையும் பார்வையிட்டனர். இதுசம்பந்தமாக அறிக்கையொன்றையும் சங்கத்தினர் தயாரித்தனர்.

விபத்தில் சிக்கி யாழ். அரசினர் வைத்தியமனையில் சிகிச்சை பெறுவோர் வருமாறு:

செல்லத்துரை (அல்லைப்பிட்டி), பொன்னம்மா (புளியங்கூடல்) நடராசா (சுருவில்), செல்லத்துரை (வேலணை) பொன்னையா (வேலணை), கணபதிப்பிள்ளை (நடாத்துனர்), சண்முகம் (சாரதி) சிறுகாயங்களுக்குள்ளானோர் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளனர், (கெ)

## மலையகத்தில் அரசியலமைப்பு

[கம்பளை[

மலையகத்தில் புதிய அரசியலமைப்பு விழா அமைதியாகக் கொண்டாடப்பட்டது. அரசாங்க கட்டடங்கள் மின்விளக்குகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பாடசாலைகளில் தேசியக் கொடியேற்று வைபவங்கள் நிகழ்ந்தன. கம்பளை சாஹிரா கல்லூரியில் அதிபர் தேசியக்கொடியை ஏற்றிவைத்தபின் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். எதுவித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. [உ[

**வவனியாவில்**

''இனமத பேதமற்ற தார்மீக சமுதாயத்தை அமைப்பதன் மூலம் சுபிட்சமான ஒளிமயமான எதிர்காலத்தை இலங்கையில் அமைக்கக்கூடிய வாய்ப்பை இப்புதிய அரசியலமைப்பு ஏற்படுத்துகிறது'' என்று வவனியா அரசாங்க அதிபர் வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற சத்தியப்பிரமாண வைபவத்திற்கு தலைமைதாங்கிப் பேசியபோது கூறினுர்.

மேலும் அவர் பேசுகையில், புதிய அரசியலமைப்பின் கீழ் முக்கியநிர்வாகக் கருமங்களில் பொதுமக்கள்விரும்பும் அபிப்பிராயங்களை அறியக்கூடிய வழிவகைகள் உள்ளதால் பொதுமக்கள் நிர்வாக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

அரசாங்க அதிபர் சத்தியப்பிரமாணம் செய்ததைத் தொடர்ந்து மற்ற திணைக்கள உயர்அதிகாரிகள் சத்தியப்பிரமாணம் எடுத்தனர். இந்த நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத வழிபாட்டு நிலையங்களில் நடைபெற்ற விசேட ஆராதனைகளில் இவர்கள் கலந்துகொண்டனர். [உ]

## புத்தகசாலையில் துணிகரத் திருட்டு

(நெல்லியடி)

நெல்லியடி பஸ்நிலையத்தில் அமைந்துள்ள புத்தகசாலையில் இரவு வேளையில் திருட்டு நடைபெற்றுள்ளது. சுமார் 2000 ரூபாவிற்கு மேல் பெறுமதியுள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளன. கவிப்ரிக்கட், சிகரட், பைக்கட் எவரெடி பற்றறிகள் சோப் வகைகள, மகளிர் அணியும் முத்துமாலைகள்என பலவகைப்பட்ட பொருட்களும் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டு தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் சி. பொன்னம்பலத்தினுல் புகார் செய்யப்பட்டுள்ளது.

சப்இன்ஸ்பெக்டர் நந்தலர், சார்ஜண்ட் மாணிக்கராஜா திருட்டு நடைபெற்ற இடத்திற்கு விரைந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

இப்புத்தகசாலையில் திருடர்களால் விட்டுச் செல்லப்பட்ட வெற்றுச் சாராயப் போத்தலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (உ)

## தீப்பற்றிய...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யால் எரிந்து முடிந்த பின் பார்த்தபோது அவர் எரிந்த நிலையில் கருகி மரணமாயிருந்ததாகவும் சாட்சியங்கள தெரிவித்தன.

இதையடுத்து விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (உ)

## மன்னுரில் வரட்சி

(மன்னுர்)

மன்னுரில்கடும்வரட்சி நிலவுகிறது. குளங்களும் கிணறுகளும் வரட்சியால் வற்றிவிட்டன. குடிநீருக்காக மன்னுர் மக்கள்பல மைல் தூரம்செல்ல வேண்டிய கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. சாலபோசம், உப உணவுப்பயிர்ச்செய்கையாவும் வரட்சியினுல் பாதிக்கப்பட்டுள்ள. (உ)

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ்.மா.ப.நோ.கூட்டுறவுச் சங்கம், எமது தொழிற்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30ம்திகதி நடைபெறுவதனையொட்டி எமது அங்கத்தவர்களுக்கு அன்று வாகன வசதியும் கடமை லீவும் வழங்குவதற்கு சம்மதித்திருக்கிறது. இதேபோல் மற்றைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்க நிர்வாகங்களும் எமது சங்க அங்கத்தவர்களுக்கு வாகனவசதி, கடமை லீவு அளித்து பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்''

இவ்வாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கச் செயலாளர் திரு. ரி. இராஜேந்திரம் அறிக்கை ஒன்றின்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

# சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்படவில்லை

## சாவகச்சேரி பஸ்கொள்ளை தொடர்பான அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரித் தொகுதியில் நடந்த பஸ் கொள்ளை தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

சாவகச்சேரி பதில் நீதிபதி திரு. எஸ். பாலகிருஷ்ணன் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் நடந்த துப்பாக்கிகள்கொள்ளை தொடர்பாக பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் சிலருக்கு பஸ் கொள்ளையிலும் சம்பந்தமிருக்கலாம் என்ற சந்தேகத்தின் காரணமாக அவர்களில் 18 இளைஞர்கள் மூடி மறைக்கப்பட்ட வாகனங்களில் சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டனர்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான அணிவகுப்பு 4 மணிக்கு முடிவடைந்தது. இந்த அணிவகுப்பில் 75 பேர் இடம் பெற்றனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜிம்மி ராஜரத்தினம். எஸ். லோகேஸ்வரன், கே.கிருஷ்ணகுமார், பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜரானார்கள்.

பொலிஸ் தரப்பில் சாவகச்சேரி பொலிஸார் ஆஜரானார்கள்.

அடையாளம் காட்டுவதற்காக பஸ் கண்டக்டர் சுந்தரம் முத்துலிங்கம். பஸ்பிரயாணி அப்துல்காதர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

அடையாள அணிவகுப்பு ஆரம்பிக்குமுன்னர் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் ஆட்சேபம் தெரிவித்தார்.

சந்தேகநபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு சரணடையக் கொண்டுசென்றபோது அங்கு அவரை பொறுப்பேற்க மறுத்து யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசெல்லுமாறு கூறினார்கள் என்று சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் கூறினார், அவர் தொடர்ந்து கூறியதாவது:-

சந்தேகநபரை பொலிஸ்நிலையத்தில் 3 நாட்கள் வைத்திருந்து பின், அவரை பஸ் நிலையத்திற்கும் கொண்டுசென்று அங்கிருந்து பூநகரிக்குக் கொண்டுசென்று திருப்பிக் கொண்டுவந்தார்கள். பின் சச்சமட்டைக்கும், கொக்குவிலுக்கும் பிரதான வீதிவழியாகப் பொதுவாகனத்தில் கொண்டுசென்றார்கள். சந்தேகநபரை எல்லாரும் காணக்கூடியதாக இருந்தது. ஆதலால் அடையாள அணிவகுப்பில் பிரயோசனமில்லை.

சட்டத்தரணி எஸ்.லோகேஸ்வரன்: சந்தேகநபர்கள் பல பொது இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாலும், பலர் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்ததாலும், அடையாள அணிவகுப்பில் பிரயோசனமில்லை எனக் கூறினார்.

சட்டத்தரணி கே.கிருஷ்ணகுமார்! சந்தேகநபர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலிருந்தபோது சந்தேகநபருக்கு அறிமுகமில்லாத ஒருவர்அங்கு வந்து அவரைப் புகைப்படமெடுத்துச்சென்றார் என்றும், இதனால் அடையாள அணிவகுப்பு பயனில்லை என்றும் கூறினார்.

சட்டத்தரணி பி. பாலசுப்பிரமணியமும் அடையாள அணிவகுப்புக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

பதில் நீதிபதி திரு, எஸ். பாலகிருஷ்ணன் இந்த ஆட்சேபங்களை பதிவுசெய்துஅடையாள அணிவகுப்பை நடத்துவதாகத் தெரிவித்தார்.

அடையாள அணிவகுப்பு முடிவடைந்ததும் சந்தேகநபர்கள் மூடிமறைக்கப்பட்ட வாகனங்களில் கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்த அணிவகுப்பு தொடர்பான வழக்கு நாளைக்காலை வரை பின்போடப்பட்டுள்ளது. (க-மட்டு-நிரு)

# யாழ்.மாவட்ட குழுக்கூட்டம் தமிழில் நடக்கவேண்டும்

## அரசாங்க அதிபருக்கு கா. பொ. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டக் குழுக்கூட்டம் இனிமேல் தமிழிலேயே நடைபெறவேண்டும். இதற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ, உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கோருகிறேன். இதன் மூலம் தமிழ்மக்கள் தமது நிர்வாகத்தைத் தமிழிலேயே செய்யமுடியும்'' என்று நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ் மாவட்டக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டுக்கொண்டார்.

### முதலாவது கூட்டம்

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் யாழ் செயலகத்தில் நடைபெற்ற முதலாவது குழுக்கூட்டம் இதுவாகும். யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். குழுக் கூட்டத்தில் வடபிரதேசத் திணைக்களத் தலைவர்கள், கூட்டணி எம். பி.க்கள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்குழுக்கூட்டம், ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மாத்திரமே நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;-

நெடுந்தீவு, புங்குடுதீவு ஆஸ்பத்திரிகளில் பல்சிகிச்சை நிலையம் அமைக்க அங்கீகாரம்,

நெடுந்தீவுக்கு பிறப்பு, இறப்பு அதிகாரியை நியமனம் செய்ய வெற்றிடம் கோருதல்.

சரவணை, ஊர்காவற்றுறை குடிநீர்ப் பிரச்னைக்கு உடன் நிவாரணமளிக்கும் நடவடிக்கைகள்.

ஊர்காவற்றுறை வாடிவீடு அமைப்பு நிர்மாண வேலையை ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்திடம் வழங்குதல்.

பண்ணைப்பாலம், காரைநகர் தாம்போதி அமைப்பு நிர்மாணங்களுக்கு புதிய வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

சித்தங்கேணி. புங்குடுதீவு, உடுப்பிட்டியில் விற்பனைத் திணைக்கள கடைகள்திறத்தல்.

ஊர்காவற்றுறை - இறப்பிட்டி புதிய பஸ்சேவை நடைமுறை.

உடுப்பிட்டித்தொகுதியிலுள்ள உபதபாலகங்களைத் தரமுயர்த்தல்.

நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி. (கெ)

# தீவுப்பகுதிக்கு தனியான பஸ் டிப்போ

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதிககுதனியான பஸ் டிப்போவொன்று அமைகக நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான இடம் விரைவில் தெரிவுசெய்யப்படும் என்றும் இப் பகுதிக்கு தனியான டிப்போ அமைப்பதன்மூலமே தீவுப்பகுதி பஸ் சேவை சீராக நடைபெற முடியும் என்றும் இ. போ. ச. அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தீவுப்பகுதி பஸ்சேவை சீரமைப்பு சம்பந்தமாகவும் இச் சேவைகளில் உள்ள குறைபாடுகளை சீர்செய்யும் முகமாகவும் தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கத்திற்கும் வட பிரதேச இ. போ. ச. அதிகாரிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. வட பிரதேச இ. போ. ச. கட்டுப்பாட்டதிகாரி திரு. நா. தியாகராசா தலைமையில் நடந்த இப் பேச்சுவார்த்தையில், இ. போ. ச. யாழ். டிப்போ அத்தியட்சகர் திரு. • கே. மயில்வாகனம் நேரஅட்டவணை மேற்பார்வை 'உத்தியோகத்தர் திரு. கே. சிவபாதசுந்தரம் ஆகியோரும், தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. பி. ஜே. அலோசியஸ். செயலாளர் திரு. துரைராசா, பொருளாளர் திரு. அ. போல், உப தலைவர் திரு. எஸ். கந்தையா நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் திரு. எஸ். பாலசிங்கம், செயற்குழுவின் பாடசாலைப் பிரிவு பிரதிநிதி திரு. குலபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மண்டைதீவு பஸ் போன்று தனியான பாதைகளில் ஓடும் பஸ் வண்டிகள் நல்ல தரத்தில் உள்ளவைகளாக சேவைக்கு விட நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும், மண்டைதீவுக்கு இரண்டு பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும், முழுநேரமும் சேவையில்லாதிருக்கும் பாதைகளுக்கு இரவு பத்துமணி வரை நடைபெற ஏற்பாடு செய்வதாகவும் அதிகாரிகள் உறுதியளித்தனர்.

## இன்று தீர்ப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப் பணம் கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பை நடத்துவா? இல்லையா? என்பது பற்றி பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் இன்று காலை தீர்ப்பளிப்பார். (க)

## இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறுகிறது

(கொழும்பு)

தபால், தந்தி அமைச்சர் திரு. றெனேல்ட் ஷெல்டன் ஜயசிங்காவின் இறுதிச் சடங்குகள் இன்று மாலை ராஜாங்க மரியாதையுடன் நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு. அவரது வத்தளை இல்லத்திலிருந்து நாயக்ககந்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இறுதி ஊர்வலத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச மற்றும் சக அமைச்சர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், மத பீடாதிபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

தபாலமைச்சரின் இறுதிக் கிரியைகளையொட்டி இன்று தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் அமெரிக்காவிலுள்ள அமைச்சரின் மகளான நெலுன்காந்தி ஜயசிங்கா. நேற்று இலங்கை வந்து சேர்ந்தார். (கெ)

## நற்சான்றிதழ் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த கார்த்திகை உற்சவ தினத்தன்று காலை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பிடாரோகண விழாவில், காலை அபிஷேகமும், ஆராதனைகளும் இடம் பெற்றன. மாலை வண்ணை வீரமாகாளியம்மன் கூட்டுப் பிரார்த்தனைச்சபை சார்பில் இ. முரளிதரன், ந. இராசநிதி, இ. பிரபாகரன் ஆகிய மாணவர்கள் நல்லை ஆதீனத்தின் சிறப்புக்கள் குறித்து உரையாற்றினார்கள். வீரமாகாளி அம்மன் பிரார்த்தனைச் சபை மாணவ மாணவிகள் சமயச் சிறப்புச் சொற்பொழிவாற்றியமைக்காக அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்றம் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் பின்வரும் மாணவமாணவிகளுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கினார். பெயர்கள் பின்வருமாறு:

ம. ராஜேந்திரன, த. பிரதீபன், சி. சியாமளா, சி. விஜிதா, சி. ரவிசங்கர், சி சுதர்சினி, ஆ. சுலோசனா, ஜெ. ஜெயபாலேந்திரன், இ. ராஜகாந்தன், இ. கௌரிகாந்தி, இ குபேரகாந்தன், இ. பிரபாகரன், இ. முரளீதரன், ந பிரபாகரன், ந. செல்வநிதி ந. இராஜநிதி, து. சிவலிங்கம்.

இம்மாணவ, மாணவிகள் நல்லூர் உற்சவததின்போது அம்மன் முருகன் தண்ணீர்ப் பந்தலில் தினமும் கூட்டுப் பிரார்த்தனையும், நற்சிந்தனையும் நடத்திப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டிலிருந்து தாயகம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்செயல் புரியப்பட்டுள்ளதென்று நான் நினைக்கிறேன்.

''நாட்டை விட்டுச் செல்லும் நோக்கம் திரு. ஜே. ஆருக்கு இருக்கவில்லை. அப்படியிருந்தபோதிலும், அவரது கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்ய மேலிடத்திலிருந்து கட்டளைகிடைத்திருந்தது. வெளிச்செலாவணிச் சட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கூறப்பட்டது. இதுபற்றி முன்னைய பிரதமரின் செயலாளர்கள் என்னை அழைத்து விளக்கினர். முன்னாள் பிரதமரிடமிருந்தும், அப்போதைய பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்தும் கடிதங்கள் கிடைக்கும் என்று கூறப்பட்டபோதிலும். எனக்கு எந்தவிதமான கடிதமும் கிடைக்கவில்லை.

### தேர்தல் பிரசாரம்

''வெளிநாட்டிலிருந்து திரும்பியதும், பெருமளவில் தேர்தல்பிரசாரத்தை மேற்கொள்ள திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திட்டமிட்டிருந்தார். இதற்குகளங்கமேற்படுத்தும்வகையில் அவர்மீது இவ்விதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றேன்'' (ம)

## பார்க்கிர் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால்தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்கா காலமானதைத் தொடர்ந்தே வத்தளை தொகுதிக்கு புதிய உறுப்பினர் நியமிக்கப்படுகின்றார்.

புதிய அரசியலமைப்பின்படி, ஒரு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் காலமாகிவிட்டால், அத்தொகுதி எம். பி. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்தக் கட்சி புதியஉறுப்பினரைத் தெரிவு செய்யும். கட்சி தேர்ந்தெடுக்கும் அங்கத்தவரே அந்தத் தொகுதியின் புதிய எம். பி. யாகப் பதவி யேற்பார். முன்னர்போல, இடைத்தேர்தல் நடைபெற மாட்டாது. (ம)

## பீஹார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரத்தில் மே வங்காளத்திலும் கங்கைநீர்மட்டம் உயர்ந்துவருகிறது.

ஆக்ராவில் வெள்ளம் வடியத் தொடங்கியுள்ளது. புகழ்வாய்ந்த தாஜ்மகால் நாளை முதல் மீண்டும் திறந்துவைக்கப்படும்.

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 195 பேர் பலியானார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu' Telephone 389 Registred as a Newspaper in Srilanka